1. முதலாவது Nomad(நாடோடி இனத்தவர்) திரைப்பட விழா பின்வரும் எந்த நகரங்களில் தொடங்கியது ?

A.மும்பை
B.ஜெய்ப்பூர்
C.புது தில்லி
D.ஜபல்பூர்

**விடை : C.புது தில்லி**

பழங்குடியினருக்கு விழிப்புணர்வு மற்றும் அவர்கள் மீது பிறர் கொண்டுள்ள உணர்வுகளை மாற்ற, புது தில்லியில் இந்திய இஸ்லாமிய கலாச்சார மையத்தில் 2016 Nomad திரைப்படவிழாவின் முதலாவது பதிப்பு துவங்கியது. இதில் பழங்குடியினரின் வாழ்வை வெளிப்படுத்தும் குறும்படங்கள் மற்றும் ஆவணப்படங்கள் திரையிடப்பட உள்ளன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1871-ம் ஆண்டின் குற்றவியல் பழங்குடியினர் சட்டத்தின் கீழ், இவர்கள் 'குற்றவியல் பழங்குடியினர்' பட்டியலில் சேர்க்கப்பட்டனர்.

2. 2016-ம் ஆண்டிற்கான சரளா விருது யாருக்கு வழங்கப்பட்டது ?

A.சுனிதா ஜெயின்
B.பத்ம சச்தேவா
C.ஹிருஷிகேஷ் மல்லிக்
D.நிர்மலா குமாரி

**விடை : C.ஹிருஷிகேஷ் மல்லிக்**

டாக்டர் ஹிருஷிகேஷ் மல்லிக், பிரபல ஒடியா கவிஞர், அவரது கவிதையான "Jeje Dekhi Nathiba Bharat" எனும் படைப்பிற்கு மதிப்புமிக்க சரளா விருது(37வது பதிப்பு) வழங்கப்பட்டுள்ளது. வருடந்தோறும் வழங்கப்படும் இவ்விருதிற்கு ரூ .5 லட்சம் மற்றும் ஒரு சான்றிதழ் பரிசாக வழங்கப்படுகிறது.

3.பிரணாவ் ஜெர்ரி சோப்ரா எந்த விளையாட்டுகளுடன் தொடர்புடையவர் ?

A.கால்பந்து
B.பூப்பந்து
C.ஹாக்கி
D.குத்துச்சண்டை

**விடை : B.பூப்பந்து**

இந்தியாவின் கலப்பு இரட்டையர் ஜோடியான சிக்கி ரெட்டி மற்றும் பிரணாவ் ஜெர்ரி சோப்ரா ஜோடி, கோஸ்டா கேவலகண்டேவில் நடைபெற்ற 2016 பிரேசில் ஓபன் கிராண்ட் பிரிக்ஸ் பாட்மின்டன் போட்டியில் கனடாவின் டோபி இங், ரேச்சல் ஹோண்டெரிச் ஜோடியை 21-15, 21-16 என்ற நேரடி புள்ளிகணக்கில் தோற்கடித்து வெற்றிபெற்றது.

4. இந்திய ரிசர்வ் வங்கி(RBI)யின் புதிய ஆளுநர் யார் ?

A.அமிதாப் காந்த்
B.ஆனந்த் சின்ஹா
C.எஸ் எஸ் முந்த்ரா
D.உர்ஜித் படேல்

**விடை : D.உர்ஜித் படேல்**

டாக்டர் உர்ஜித் படேல், இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ)யின் புதிதாக நியமிக்கப்பட்ட ஆளுநர். இவருக்குமுன், டாக்டர் ரகுராம் ராஜன் ஆளுநராக இருந்தார். இந்த பதவிக்கு முன்பு உர்ஜித் படேல், ரிசர்வ் வங்கியின் துணை கவர்னராக இருந்தார்.

5. கூட்டத்தை கட்டுப்படுத்த மிளகாய் சார்ந்த PAVA குண்டுகளை பயன்படுத்த மத்திய அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்தது. "PAVA" என்பதன் விரிவாக்கம் ?

A .Para aminobenzoic Acid Vanillyl Amide
B. Pantothenic Acid Vanillyl Amide
C. Palmitic Acid Vanillyl Amide
D. Pelargonic Acid Vanillyl Amide

**விடை : D. Pelargonic Acid Vanillyl Amide**

மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், Pellet துப்பாக்கிகளுக்கு மாற்றாக மிளகாய் சார்ந்த PAVA குண்டுகளை பயன்படுத்த

ஒப்புதல் அளித்ததார். இதனை உபயோகிப்பது அரிதினும் அரிது என்று கூறப்படுகிறது. PAVA என்பதன் விரிவாக்கம்- Pelargonic Acid Vanillyl Amide. இது Nonivamide என்றும் அழைக்கப்படுகிறது. இயற்கையாகவே மிளகாயில் கிடைக்கும் ஒரு கரிம சேர்மம் Nonivamide ஆகும். PAVA என்பது ஆயுதங்கள் அல்ல மாறாக இலக்கை தற்காலிகமாக சில நிமிடங்கள் அசைவற்ற நிலையில் வைப்பதாகும். T V S N பிரசாத் நிபுணர் குழு இந்த பரிந்துரை அறிக்கையை சமர்ப்பித்தது.

6. சமீபத்தில் மத்திய சுகாதார அமைச்சகம் தொழுநோயை ஒழிக்க LCDC பிரச்சாரத்தை முன்னெடுத்துள்ளது. "LCDC" என்பது எதை குறிக்கிறது ?

A. Leprosy Case Deceive Campaign
B. Leprosy Case Detector Campaign
C. Leprosy Case Detection Campaign
D. Leprosy Case Detecting Campaign

**விடை : C. Leprosy Case Detection Campaign**

மத்திய சுகாதார அமைச்சகம் சமீபத்தில், இந்தியாவில் தொழுநோய் பரவி வரும் 149 மாவட்டங்களில் தொழுநோயை ஒழிக்க LCDC(Leprosy Case Detection Campaign) பிரச்சாரத்தை முன்னெடுத்துள்ளது. 2 வார காலம் நடைபெற உள்ள இந்த பிரச்சாரத்தின் நோக்கம், 20 மாநிலங்கள்,149 மாவட்டங்கள், 1656 தொகுதிகளில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று தொழுநோய் உள்ளவர்களை கண்டறிந்து, சிகிச்சையளித்து அதனை பரவாமல் தடுப்பதே ஆகும்.இதற்காக சுமார் 3 லட்சம் சுகாதார அணிகள் அமைக்கப்பட்டுள்ளன. செப்டம்பர் 18 வரை இந்த பிரச்சாரம் நடைபெறும்.

7. இந்தியாவின் எந்த உயர் நீதிமன்றம் சமீபத்தில் e-stamping வசதியை அறிமுகம் செய்துள்ளது ?

A.ஹரியானா
B.உத்தரப் பிரதேசம்
C.ராஜஸ்தான்
D.ஆந்திரப் பிரதேசம்

**விடை : C.ராஜஸ்தான்**

ராஜஸ்தான் உயர்நீதிமன்றம் சமீபத்தில், ஜோத்பூர் மற்றும் ஜெய்ப்பூர் பெஞ்சுகளில் ஒரே நேரத்தில் e-முத்திரை வசதியை தொடங்கியது. இந்த வசதியை வழங்கும் 4வது இந்திய மாநிலம் ராஜஸ்தான் ஆகும். இதற்கு முன், இந்த வசதி தில்லி, சத்தீஸ்கர் மற்றும் இமாசலப் பிரதேசத்தில் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டன. e-முத்திரை வசதி முற்றிலும் பாதுகாப்பானது மற்றும் நம்பகத்தன்மை வாய்ந்தது. இதில் எந்த ஒரு மோசடியும், சேதமும் ஏற்பட வாய்ப்பு இல்லை. நீதிமன்றத்தில் கட்டணம் செலுத்த இ-முத்திரைகள் முறை எளிய, சுலபமான மற்றும் பாதுகாப்பான முறை ஆகும்.

8. 'Shramdaan' இயக்கத்தை துவங்கியுள்ள இந்திய மாநிலம்/யூனியன் பிரதேசம் எது ?

A.புதுச்சேரி
B.ஆந்திரப் பிரதேசம்
C.ஒடிசா
D.லட்சத்தீவுகள்

**விடை: A.புதுச்சேரி**

புதுச்சேரியின் துணைநிலை ஆளுநர் கிரண் பேடி சமீபத்தில், "Swachh Bharat" மற்றும் "Swachh Puducherry" திட்டின் ஒரு பகுதியாக 'Shramdaan movement' திட்டத்தை சேலைமேடு கிராமத்தில் துவங்கி வைத்தார்.

9.சமீபத்தில் மறைந்த அரிப் பெக், எந்த துறையைச் சார்ந்தவர் ?

A.விளையாட்டு
B.அரசியல்
C.புகைப்படம்
D.ஊடகவியல்

**விடை : B.அரசியல்**

அரிப் பெக் (81), முன்னாள் அமைச்சர் மற்றும் பா.ஜ.க வின் மூத்த தலைவர், சமீபத்தில்,

மத்திய பிரதேசத்தின் போபாலில் மறைந்தார். இவர் மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா கட்சி மத்தியில் ஆட்சியில் இருந்த பொழுது மாநில அமைச்சராக (1977-79) இருந்தார்.

10. Kalesar தேசிய பூங்கா இந்தியாவின் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது ?

A.மகாராஷ்டிரா

B.கேரளா

C.ஒடிசா

D.ஹரியானா

**விடை : D.ஹரியானா**

Kalesar தேசிய பூங்கா ஹரியானாவின் கிழக்கு மாவட்ட பகுதியில் உள்ள ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதியாகும். இது சிறுத்தை மற்றும் பறவை-கவனித்தலில் ஒரு பிரபலமான இடமாக உள்ளது. மேலும் இது காட்டுப் பன்றிகள், மான்கள், முயல்கள், சிகப்பு காட்டுக்கோழி, முள்ளம்பன்றி, குரங்குகள், சிவப்பு காட்டுக்கோழி, முதலியனவற்றின் தாயகமாக உள்ளது.